# தமிழ்நாட்டு இந்து சமயங்களின் வரலாறு

சென்னை
சட்டக் கல்லூரி பேராசிரியர்
திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை
எம். ஏ., எம். எல்.,
எழுதியது

இலவச வெளியீடு

கிடைக்குமிடம் :

பல்கலைப் புலவர்
தமிழ் 'கா. சு.' நினைவு நூலகம்,
ஈசுவர வடிவகம்,
கடம்பர்கோயில் : : குழித்தலை-639104,
திருச்சி மாவட்டம்.

## அன்பளிப்பாகப் பதிப்பிப்பவர்

# கருத்து

'தமிழக இந்து சமயங்களின் சுருக்க வரலாறு' என்பது 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் திங்களிதழில் முதல் இரண்டு சிலம்புகளில் திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் எழுதப்பட்டு வெளி வந்தது.

பின்பு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 11-2-1927ல் நூல் வடிவில் வெளியிட்டனர்.

தற்போது இப்புத்தகப் பிரதி கிடைப்பது அரிதாக இருப்பதால் இலவசமாக வழங்கும் முறையில் இதை வெளியிட முன் வந்திருக்கிறேன்.

'இந்து சமயம்' என்று ஒரு தனிச் சமயம் கிடையாது. சைவம், வைணவம், சுமார்த்தம் ஆகியோர் தங்கள் சமயம் என பொதுவாக கூறிக்கொள்கின்றனர். தற்காலம் இந்துமதம் என்ற பிரசாரத்தின் கீழ் சைவசமயம் இன்னதெனத் தமிழ் மக்கள் அறிய முடியாதபடி குழப்புகின்றனர்.

தமிழர்கள் தங்கள் சமயத்தின் உண்மைகளை அறியும்படியும்; 'இந்து மதம்' என்ற பெயரின்கீழ் செய்யும் பிரச்சார தந்திரங்களில் ஏமாறுதிருக்கும் பொருட்டும் இச்சிறு நூல் அச்சிடப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்படுகிறது.

'இந்து' என்ற சொல்பற்றி பலர் கூறியுள்ள கருத்துக்கள் இத்துடன் பிற்சேர்க்கையாக வெளியிடப்பட்டுள்ளது.

௳

திருச்சிற்றம்பலம்

# தமிழ் நாட்டு இந்து சமயங்களின் சுருக்க வரலாறு

இந் நாட்டிலுள்ள சமய நிலையங்களின் இயல்பையும் வரலாற்றினையும் அறிந்து அந் நிலையங்களைத் தற்கால முறைக்கு இசையச் சீர்திருத்தஞ் செய்ய முயலவேண்டும். அவற்றின் உண்மை இலக்கணத்தையும் உயரிய நோக்கத்தையும் இதுவரை சட்ட மியற்றுவோரும் நீதிமன்றத் தலைவர்களும் உற்று நோக்கியதாகத் தெரியவில்லை. சமயம் பற்றிய சட்டங்களுந் தீர்ப்புக்களும் மிக்க பயனில்லாம லிருப்பனவாகவும் பொருத்தமற்றனவாகவும் உண்மைக்கு மாறுபட்டனவாகவுமுள்ளன. ஒரு சார்புடைய மக்கள் முயற்சியால் அவைகள் நிலைபெறுவதாயினமையே அதற்குக் காரணம்.

சமய ஆராய்ச்சிக் குறைவு காரணமாக ஆள்வோர் ஆளப்படுவோர் ஆகிய இருதிறத்தாருள்ளும் பெரும்பாலும், சுமார்த்தப் பிராமணர்களே இந்துக்கள் யாவர்க்கும் சமய ஆசிரியரெனவும், வடமொழி வேதங்களே உயர்ந்த பிரமாண நூல்களெனவுங் கருதுந் தப்புக்கொள்கை நாடெங்கும் பரவியுள்ளது. அக் கருத்து மிக்க கெடுதியை விளைத்துள்ள தென்பது அடியிற் கூறப்படுவனவற்றால் நன்கு விளங்கும். முதன்முதல் உள்ளத்தே பதிக்க வேண்டியது யாதெனில் இந்துமதம் என்ற ஒரு சமயம் உண்மையிற் கிடையாதென்பது.

'இந்து மதம்' என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயம் என்று கொள்ளப்படும். சிந்து நதிக்கரையிலுள்ளவர்களைக் குறிக்கும் 'ஹிந்து' என்ற பாரசீகச் சொல்லை

கிரேக்கர் 'இந்து' என வழங்க அவர் வழக்கைப் பின் பற்றிய மேலைத்தேசத்தார் யாவரும் இந்நாட்டிலுள்ளாரை இந்துக்கள் எனவும், இந்நாட்டை இந்தியா எனவும் வழங்கலாயினர். 'இந்து' என்ற சொல் இப்பொருளில் ஆரியம் பண்டைத் தமிழ் என்னும் இருமொழி நூல்களிலுங் கிடையாது. இந் நாட்டிலே சமயங்களைப் பற்றி யாதும் அறியாதவர்கள் தங்கள் மதத்தை இந்துமதம் என்று கூறு வார்கள். ஆனால் இந்நாட்டு மக்கள் புத்தர் காலத்திற்கு முன்னர்க்கூட ஒரு சமயத்தைத் தழுவினவராகக் காணப் படாமையின் இந்துமதம் என்றசொல் புத்தம், சமணம், மகம்மதியம், கிறித்துவம் என்பவற்றை யொழித்து ஒழிந்த பிற சமயங்கள் அனைத்தையும் சுட்டும் பொது மொழியாகக் கருதப்படவேண்டும். ஆகவே, இந்து மதம் ஒன்று உண்டு என்பது கிடையாது. ஐரோப்பியம், அமெரிக்கம், ஆங்கிலம் என்ற சொற்கள் வாயிலாக அன்னோரது நாகரிகமும் மொழி யும் குறிக்கப்படுவனவே யல்லது அவர்கள் சமயம் குறிக்கப் படாமை போல இந்து என்ற சொல்லும் இமய முதல் குமரி வரையுள்ள பரத கண்டத்தாரது நாகரிகத்தைக் குறிப்பதே யன்றிச் சமய ஒருமையைக் குறிப்பதன்றும். இக் கருத்தைச் சுவாமி விவேகானந்தரும் தமது சொற்பொழிவு பல வற்றிலுஞ் சுட்டியுள்ளார். இந்திய நாட்டினர் உடையிலும் உணவிலும் வழிபடு முறையிலுஞ் சில கொள்கைகளிலும் ஒரு வகையான ஒற்றுமையுடைமை பற்றி அவர்கள் எல்லாம் ஒரே சமயத்தவர் என்று கருதுதல் கூடாது.

ஒரு சமயத்திற்குப் பெயர் அதன் கடவுளை வைத்தாதல், தலைமையாசிரியரை வைத்தாதல், அருள் நூலை வைத்தாதல் எழுவது முறை. 'சைவம்' 'வைணவம்' என்னும் சமயப் பெயர்கள் அவ்வச் சமயக்கடவுட் பெயரான் வந்தனவாய், கிறித்துமதமும் மகம்மதிய மதமும் அவ்வச்சமயத் தலைவரது பெயரால் வந்துள்ளன. புத்தமும், ஆருகதமுங்கூட அவ்வாறேயாம். வேதநெறி, வேதாந்தம், சுமார்த்தம் என்பன முறையே வேதம், வேதாந்தசாத்திரம், ஸ்மிருதி

என்னுஞ் சொல்வழி வந்தன. ஆனல் 'இந்து' என்ற சொல்லோ மேற்குறித்த எவ்வாற்ருனும் வந்ததாகத் தோன்றவில்லை. ஆகவே, அஃது ஒரு மதத்தின் பேராகக் கொள்ளற்பாற்றன்று.

இருக்கு வேத காலத்திலேயே இருவகையான கடவுள் நெறிக் கொள்கைகள் இந் நாட்டில் வழங்கினவென்று கருத இடமுண்டு. ஒன்று மலைவாழ் முனிவர்க்குரியதாய் ஆரியராற் கைக்கொள்ளப்பட்டது. மற்ருென்று தமிழரது. 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்றதும் அது.

ஆரியவழிபாடு வேள்விப்பாலதாயும் தமிழர் வணக்கம் பொழிலகத்தே செய்யும் வடிவ வழிபாட்டின் பாலதாயும் அமைந்திருந்தன.

இற்றை நாளிலே, இத் தென்னுட்டில் தத்துவக்கொள் கையினும் பிறவற்றினுந் தம்முள் மிக்க வேறுபாடுடைய நான்கு அல்லது ஐந்து இந்து சமயங்கள் பரவியுள்ளன. சைவசித்தாந்தமும், சுமார்த்த வேதாந்தமும், வைணவமும் ஆகியவற்றுள் ஒன்றிற்கும் பிறிதொன்றிற்குமுள்ள வேறு பாடு கிறித்து மதத்திற்கும் மகம்மதிய மதத்திற்குமுள்ள வேறுபாட்டினும் மிகவும் அதிகமாம். மத்துவ சமயம் வைணவத்திற் கிளைத்தது. அவ்வாறே இலிங்காயதமும் சைவத்தின் கிளை நெறிகளில் தோன்றியதொன்ரும்.

உண்மை இவ்வாறிருப்ப இந்துமதமென்பது சுமார்த்த மதமே அல்லது சுமார்த்த வேதாந்த மதமே என்ற தப்புக்கொள்கை சுமார்த்த மதத்தினர் பெருமுயற்சியால் மக்கள் மனதில் அழுந்திக் கிடக்கின்றது. வடதேசத்தார் நன்ருக அறிந்த தத்துவக் கொள்கை சங்கரரது கொள் கையே. தந்திர நெறியினரும் அத் தேசத்தில் அக் கொள் கையைத் தழுவி நிற்றல் தெளிவு. விவேகானந்தர் என்ற பெரியாரும் அக் கொள்கையையே மேலை நாட்டினர்க்குப் பேராற்றலோடு மிகவும் நன்கு விளக்கிப் போந்தனர்.

தயானந்தசரசுவதி என்பாரது தத்துவக் கொள்கை மாத்திரம் நமது சைவசித்தாந்தத்தோடு ஒருபுடை ஒற்றுமையுடையது. பதினைந்தாவது நூற்றுண்டில் விளங்கிய சைதன்னியர் என்பவரால் வைணவ சமயம் வங்காள நாட்டில் தலையெடுக்கலாயிற்று.

தென்னிந்தியாவில் சுமார்த்த நெறியும், சங்கரர் தத்துவக்கொள்கையும் தமிழ்நாடொழிந்த மலையாள முதலிய பிறபகுதிகளில் பெரும்பான்மையும் பரவியுள்ளன. தமிழ் நாட்டிலுங்கூடப் பலர் அவற்றையும் ஆகமநெறிக் கொள்கையினையும் வேறு பிரித்தறியாது மயங்கக் கொள்கின்றனர். நாம் இப்போது உற்று நோக்க வேண்டுவது யாதெனில் சுமார்த்த நெறிக்குள்ள கோயில்கள் தமிழ் நாட்டில் அரியன வாயினும் தற்காலத்திலே அந்நெறி நிற்பாருள் செல்வமும் அதிகாரமும் உடையவர்கள் பொது ஜனங்களின் அறியாமை காரணமாகவும் தம் சமயப்பற்று மிகுதியானும் தென்னுட்டின் பெருங்கோயில்களின் வரும்படி முதலிய பல நலன்களையும் தம் வகையார்க்குப் பெரிதும் பயன்படும்படி செய்து வருகின்றுர்கள் என்பதே டாக்டர் கால்ட்வல் என்னும் பாதிரியார் இந்நாட்டின் பெருங்கோயில்கள் பலவும் சைவசித்தாந்திகளுடைய ஊக்கம் காரணமாகவே ஏற்பட்டனவே என்று கூறியுள்ளார். இப்போது சைவநெறியினைச் சுமார்த்த மத அலைகளால் பழுது படா வண்ணம் பாதுகாக்க வேண்டுவது சைவ நன்மக்களின் ஒருதலையான கடமையாகவிருக்கிறது. அதன் பொருட்டு மேற்குறித்த இந்து சமயங்களின் கொள்கை வேறுபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றுள் ஒரு சமயத்தின் பொது நிலையங்களை மற்றொரு சமயத்தாரது முழு நன்மைக்கே பயன்படுத்தா வண்ணம் பாதுகாத்தல் நமது பெருங்கடமை யென்று வற்புறுத்துதல் இன்றியமையாதது.

முதலாவது சுமார்த்த மதத்தைப்பற்றி ஆராய்வாம். நெருப்பு வாயிலாகவும் பிற இயற்கைப் பொருள்கள் வாயிலாகவும் ஆரியர் செய்த கடவுள் வழிபாடே இதற்கு

மூலமாக வுள்ளது. இம் மதத்தின் பிரமாண நூல்கள் ஆதியில் இருக்குவேதப் பாட்டுக்களாயிருந்தன. பின்னர் அவ் வேதம் மூன்றாக விரிந்து நான்காகவும் ஆயது.

தந்திர நெறிக்குரிய வடிவ வழிபாடு பிறவும் வைதிக நெறியில் பண்டைக் காலத்திலேயே கைக்கொள்ளப்பட்டன. வருண தருமம் ஏற்பட்ட பின்பு அஃது ஆரியர்களது ஒவ்வொரு ஏற்பாட்டினும் பின்னிக் கிடப்பதாயிற்று. ஆரியக் குருக்களுக்கும் பிற வகுப்பினர்க்கும் விளைந்த போரில் முன்னவர்களுடைய வெற்றியே அதற்குக் காரணமாம். சூத்திரங்களும் ஸ்மிருதிகளும் இயற்றிய பிராமண ஆசிரியர்கள் வெவ்வேறு மரபினர்க்கு வெவ்வேறு விதிகள் அமைத்துச் சமுதாய வாழ்க்கையுஞ் சட்டமும் அவ்வவர்க்கு வெவ்வேறே காட்டிப் பிரிவு செய்தனர். அக்கால முதற் கொண்டு ஆரியப் பிராமணர்கள் சுமார்த்தர்கள் என்று சிறல் பாகப் பெயர் பெற்றனர். இச் செய்தியைப் பற்றிய தொல்காப்பியச் சூத்திரம் இரண்டின் பொருளை யாவரும் உற்று நோக்கற்பாலர். அவையாவன:—

'மேலோர் மூவர்க் காகிய கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே'

'பொய்யும் வழுவும் புகுந்த பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப' —தொல்: *1089, 1090*

என்பவை.

பிற்றைக் காலங்களில் வருணாச்சிரமமென்பது சமயத்தோடு மிகவும் நெருக்கமாகக் கலந்து ஒருவன் பிராமணனாய்ப் பிறந்தாலொழிய முத்தியடைய முடியாதென்ற சுமார்த்த மதத்தின் கொடிய கொள்கையை நிலைபெறச் செய்துவிட்டது. வருணம் வேரூன்றிய பின் ஆரியர் மதம் ஸ்மிருதியின் வழித்தாயிற்று. அச்சமயத்தின் கிரியா பாகம் பூருவ மீமாம்சையாக விரிந்தது. ஒவ்வொரு கிரியையும் ஏதாவதொரு காமியப் பயனைக் கருதியே செய்யப்படுவதாயிற்று. தெய்வவழிபாடு, கல்வி, செல்வம், புகழ் முதலியன இப்பிறப்

பிலோ அல்லது அடுத்த பிறவியிலோ கிட்டுவதற்காகவே அஃது ஏற்பட்டதென்பது நிலைபெற்றது. ஆரியர்கள் முதலில் சூரியனைத் தங்கள் பெருங்கடவுளாக வழிபட்டனர். அவர்களுடைய காயத்திரி சூரியனுக்குச் செய்யும் ஒரு வேண்டுகோளின் முறை.

எல்லாங் கடவுளே என்ற தத்துவக்கொள்கையானது அவர்கட்குள் எழுந்தகாலத்தே மும்மூர்த்திகளும் ஒரே பிரமத்தின் பிரதி பிம்பங்களென்பதும் பிரமத்தைத் தவிர வேறொரு பொருளும் உண்மையில் இல்லை யென்பதும் அவர்கள் கொள்கைகளாயின. ஆன்மாவென்பது இன்னதென்றுசொல்லொணாத மாயையின் வழியாகக் காணப்படும் பிரமத்தின் பிரதி பிம்பம் என்பதே அவர்கள் கருத்து. இக்கொள்கை சில உபநிடதங்களிற் காணப்படுகின்றன சீவான்மா பிரமத்தின் சாயலேயன்றி உண்மையில் இல்லாத பொருளெனில் அதன் உய்தியைப்பற்றிப் பேச இடமில்லை. அது பிரமத்தின் பகுதியெனில் அதுவும் பிரமமே. ஆகவே பிரமம் தன்னை வழிபட வேண்டியது மில்லை. ஆதலால் தன்னைப் பிரமமென்றறிபவன் யாதொன்றையும் வழிபட வேண்டுவதில்லை யென்பதே சங்கரர் நூலின் முடிந்த கொள்கை.

ஆயினும் அறியாமையில் முழுகிக்கிடக்குஞ் சீவான்மா, காமியப்பயன் பொருட்டுப் பல தெய்வங்களையும் வழிபடற் குரியது என்பதும் அவர் கருத்து. இங்ஙனம் சுமார்த்த வேதாந்தசமயத்திற்கு இருபடிகளுள்ளன. ஒன்று உயர்ந்தது. அதில் நிற்கும் உயரிய ஆன்மாக்கட்கு வழிபாடு யாதும் வேண்டியதில்லை. மற்றொன்று தாழ்ந்தது. அதில் நிற்பவர்கள் உலகப்பயன் கருதி வழிபாடு செய்ய வேண்டியது. இச் சமயக் கொள்கையை ஆய்வதற்கும் மறுப்பதற்கும் இங்கு இடம் போதாது. ஈண்டு நாம் உற்று நோக்கத்தக்கது யாதெனில் சுமார்த்தரது கிரியாநெறி அவர்களுடைய தத்துவக்கொள்கையோடு இணக்கமில்லாததென்பதே.

சுமார்த்தமதத்தில் ஞாயிறும் மும்மூர்த்திகளும் சிறந்த தெய்வங்களாவர். அம் மதத்தார் தமது காலைச் சந்தியா வந்தன காலத்தில் வழிபடுந்தெய்வஞ் சூரியன், சுமார்த்தர்கள் வீட்டில் செய்யப்படும் அக்கிநி காரியத்திற்குச் சான்றாக வழிபடுந் தெய்வம் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்ற மற்றிரு தெய்வங்களையும் சைவ வைணவ ஆலயங்களில் சென்று வழிபடுகின்றார்கள். சுமார்த்தர்களுள் சிலர் உருத்திரனையும், மற்றுஞ் சிலர் விஷ்ணுவையும் சிறப்பாக வழிபடுவதுண்டு. இதனால் இவர்களுக்குள்ளே சைவர்களெனவும் வைணவர்களெனவும் இருபகுதியார் காணப்படுவர். முன்னையோர் விபூதியையுஞ் சந்தனத்தையுந் திரிபுண்டரமாகத் தரிப்பர். பின்னையோர் சந்தனத்தை ஊர்த்துவ புண்டரமாகத் தரிப்பர். சுமார்த்த மதத்தில் மும்மூர்த்திகளும் சமமாகிய பெருமையை யுடையவர்களாகக் கருதப்படுகின்றார்கள். ஆனால் அவர்கள் கருதுகின்றபடி ருத்திரனுக்கும் விஷ்ணுவுக்கும் தமிழ் நாட்டில் ஆலயங்கள் அமைக்கப்படவில்லை. இது நன்கு கவனிக்கத்தக்கது. சிவாலயம், மும்மூர்த்திகளில் ஒருவராகிய உருத்திரனையும் பிற தெய்வங்களையும் தமக்குஅடிமைகளாகவுடைய முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைச் சைவர் வணங்கற்குரியது. வைணவாலயம் விண்டுவை வைணவர் வணங்கற்குரியது. ஆனால் அத்தெய்வத்தை அவர்கள் மும்மூர்த்திகளுட் சிறந்தோனாகக் கருதுகின்றனர். ஆதலால் சுமார்த்தர்கள் அன்னியர்களது கோயிற்களிற் சென்று வீணே தமது தெய்வங்களைத் தேடுபவர்களாவர். சுமார்த்தர்களது பிரமாண நூல்களைப் பற்றி அம்மத ஆராய்ச்சியை முடிவு செய்வோம்.

1. நான்கு வடமொழி வேதங்கள்-இவற்றிற் கூறிய தெய்வங்கள் எல்லாவற்றையும் சுமார்த்தர்கள் வழிபடுவார்கள்.

2. (a) உபநிடதங்களுள் பத்து சங்கரரது ஏகாத்மவாதக் கொள்கைக்கு இணங்கியவை. அவற்றையே சிறந்த

பிரமாணங்களாகவும் பிற உபநிடதங்களை அவற்றிற் கிணங்கவும் பொருள் கொள்வர்.

(b) வியாசரது பிரமசூத்திரமும் பகவத்கீதையும் சங்கரர் வியாக்கியானத்திற் கிணங்கப் பொருள்கொள்ளப்படும். இவைதான் சுமார்த்தரது தத்துவக்கொள்கைக்குச் சிறந்த பிரமாண நூல்கள்.

3. ஒழுக்கத்திற்குஞ் சட்டத்திற்கும் ஸ்மிருதிகளே உயர்ந்த ஆதாரங்கள். கல்பசூத்திரங்கள் யாகத்திற்குரிய கிரியைகட்கும் பல தெய்வங்களின் உருவ வழிபாட்டிற்கும் உள்ள விதிகளைக் கூறுவன. உருவ வழிபாட்டிற் குரியன தந்திரங்களினின்றுந் தழுவப்பட்டன. இவ் விஷயத்தில் தான் ஆகமம் அல்லது தந்திரத்தைச் சிறிது மதிப்பார்கள். மற்ற காரியங்களில் தந்திரமென்பது வைதிக சுமார்த்தருக்கு மிக வெறுப்பாகவுள்ளது. பலதெய்வங்களை வணங்கிய பக்தர்கள் பெற்ற பயன்களைப் புராணங்கள் கூறுதலால் அவற்றையுங் கிரியா காண்டங் கைக்கொள்ளும் சுமார்த்தர் அங்கீகரிப்பர்.

இனி வைணவத்தை ஆராய்வாம். வேதகாலத்திலே விஷ்ணு என்ற சொல் சூரியனைக் குறித்து நின்றதாக ஆராய்ச்சிக்காரரர் கருதுகின்றார்கள். பின்பு மும்மூர்த்திகளில் ஒருவருக்கு அப்பெயர் ஏற்பட்டது. இராமாயண மகாபாரத இதிகாச கதைகள் ஜனங்களுக்குள்ளே மிகுதியும் பரவிய பின்பு இராமரும் கிருஷ்ணரும் விஷ்ணுவின் அவதாரமாக வணங்கப்பட்டார்கள். தென்னாட்டிலே தமிழர்கட்குள் அன்பு என்னும் பொருளுடைய மால் என்னுஞ் சொல் ஆதியிலே அம்பாளைக் குறிப்பதாக வழங்கிப் பின் முல்லைநில மக்களது வழிபடு கடவுளுக்குப் பெயராயிற்று. ஆரியர்கள் வந்த பிறகு மால், விஷ்ணு என்ற சொற்கள் ஒரே கடவுளைக் குறிக்க வழங்கிவந்தன. ஏனெனில் யாதவகுலத் தலைவராகக் கிருஷ்ணர் பிறந்தமையானும் அக்குலத்தவரே தென்னாட்டில் முல்லைநிலச் சார்பாகத் தங்கித் தென்னாட்டு ஆரியர்களோடு

ஆரியர்களோடு பழகினமையானும் அவ்வாருயிற்று. தமிழர் மால் அல்லது விஷ்ணு என்பது அம்பாளுடைய ஆண்வடிவம் என்று கருதினுர்கள்.

வைணவ சமயத்திற்கு ஆதித்தலைவர்கள் தென்னுட்டினராதலால் ஆலய வழிபாடும் பூசையும் ஆன்மா முத்தியடையும்வரை இன்றியமையாது கைக்கொள்ளற்பாலன என்ற கொள்கை அம்மதத்தில் நிலைத்தது. கடவுளுங்கூட அழியாத உருவத் திருமேனியுடையாரென்றும் அவர்கள் கொண்டனர். அவர்கள் சமய வழிபாட்டு விதிகள் பாஞ்சராத்திரம் வைகாநசம்என்ற இரண்டு தந்திரங்களிலடங்கும். பகவத்கீதையும் பிரம சூத்திரமும் சில உபநிடதங்களும் அவர்கட்கு வடமொழியிற் சிறந்த பிரமாணங்கள். அவற்றிற்கு இராமானுஜரது உரையையே அவர்கள் கொள்வார்கள். தமிழில் ஆழ்வார்களுடைய நாலாயிரப் பிரபந்தமும் மணிப்பிரவாளத்தி லெழுதிய அவற்றின் பாஷியங்களும் அவர்கட்கு முக்கிய பிரமாணங்கள்.

மத்வமதம் பிராமண சமுதாயத்தாருக் குள்ளேதான் மிகுதியும் பரவியிருப்பதாய்த் தெரிகிறது. வைணவ சமயத்திற்குரிய தத்துவ நூல்கள் அம்மதத்தார்க்கும் பிரமாணந்தான். ஆனுல் உரைமாத்திரம் வேறு. ஸ்ரீமத்வாசாரியார் கடவுள், உயிர், ஜடம் இவை தனித்தனி வேறென்ற கொள்கையுடையவர். இராமானுஜர் உலகத்தைக் கடவுளின் பரிணுமமாகக் கொள்வர். உயிர்கள் கதியடையுந்திறத்தில் வெவ்வேறு ஆற்றலுடையன வென்பது மத்வரது கொள்கையே. சில ஆன்மாக்கட்கு உயர்ந்த முத்தியடைதல் என்றுமில்லை யென்ற கொள்கை அம்மதத்திற்கே சிறந்துள்ளது. இக்கருத்து வருணம்பற்றிய உயர்வின் விளைவெனக் கருத இடமுண்டு. இம்மதத்தில் அநுமார் மிகச் சிரத்தையோடு வழிபடப்படுகிறுர். மத்வசமய ஆலயங்கள் தமிழ் நாட்டில் அரியனவாம்.

லிங்காயத மதம் கன்னட தேசத்தில் பெரிதும் வழங்குவது. வைணவம்போல அதுவும் ஆதியில் சமுதாயச்

சீர்திருத்தம் பற்றிய சமயமாகவிருந்தது. சுமார்த்தத்தோடு நேர்பகைமை பாராட்டினும் அதன் தத்துவக்கொள்கை சில பகுதிகளில் சைவ சித்தாந்தத்தினின்றும் வேறுபட்டது. முத்தியைப்பற்றிய கொள்கையில் ஒரு சிறிது வேதாந்தத்தையும் அது தழுவி நிற்கிறது. அச்சமயத்தின் முக்கிய நூல் வீராகமம். அதனால் அச்சமயிகள் வீரசைவரெனப்படுவர்.

இனி, சைவசமயத்தைப்பற்றி ஆராய்வாம். அது தமிழர்களுடைய மிக்க பழமையான சமயமென்று டாக்டர் ஜி. யூ. போப் (Dr. G. U. Pope) அபிப்பிராயப்படுகிறார். விரிந்த முறையிற் கருதுமிடத்து, சுமார்த்தம் எங்ஙனம் வைதிகப் பக்கமோ, அவ்வாறே சைவம் தந்திரப் பக்கமாகும். சிவ என்ற தமிழ்ச்சொல் யஜுர்வேத காலத்திலேயே வடமொழியிலே வழங்குவதாயிற்று. சிவ வழிபாடு பண்டைத் தமிழர்க் குரியதாயிருந்தது என்று மேலைத்தேசத்து ரகோசின் முதலிய வேத நூற்புலவர் கருதுகின்றார்கள். சிவபெருமானை முதன்முதல் ஒரு மரத்தின் நிழலில் பீடமும் கற்பிழம்பும் சேர்ந்த உருவமைத்துத் தமிழர் வழிபட்டு வந்தனர். அதைத்தான் சிவலிங்கமென்று தந்திர நூல்கள் கூறும். இது தமிழ் நாடு உண்டான கால முதல் நிலவிய நெறியாகத் தோன்றுவதோடு தென்றமிழ் நாட்டைக் கடல்கொள்ளுதற்குமுன் இமய முதல் குமரி வரையும் அதற்குத் தெற்கேயும் பரவியிருந்ததாகத் தெரிகிறது. இப்பொழுதும் ஒவ்வொரு சிவாலயத்திலும் பிரதானமான மூர்த்தி சிவலிங்கமே. இமயத்தில் கைலாசத்திலும் கேதாரத்திலும், வட இந்தியாவில்காசியிலும், பம்பாயிற் கோகரணத்திலும், தெலுங்குதேசத்தில் ஸ்ரீபருப்பதம் அல்லது ஸ்ரீ சைலத்திலும், தென்னிந்தியாவில் இராமேஸ்வரம், மதுரை முதலிய தலங்களிலும், சிவலிங்கமானது ஜோதிலிங்கம் என்று கூறப்படுகிறது. தெலுங்கு தேசமென்பது திரிலிங்க தேசத்தில் மருஉமொழியென்று ஒரு சிலர் கொள்ளுகின்றார்கள். ஒரு லிங்கம் காளஹஸ்தியினும், மற்றொன்று ஸ்ரீபருப்பதத்திலும், மூன்றாவது கஞ்சத்தி

லுள்ள மகேந்திரத்திலும் இருப்பதாகக் கூறுகின்றார்கள். சிவலிங்கம் போன்று இயற்கையிலமைந்த கற்பிழம்புகள் சுயம்புலிங்க மெனப்படும். கந்தம் என்ற தமிழ்ச் சொல் லிங்கம் என்னும் பொருளில் பன்னாட்குமுன் வழங்கிவந்தது. இப்பொழுது அது வழக்கிலில்லை. கடல் கோட்குப்பின் சைவநாட்டின் எல்லை வடக்கே இமயமும் தெற்கே பொதியமும் ஆயின

ஆதியில் கோயில் கிடையாது. ஒவ்வொரு புண்ணிய தலங்களிலும் கடவுள் வழிபடும் இடமாக ஏதாவதொரு மரத்தைப் புனிதமாகக் கொண்டார்கள். சிதம்பரத்தில் தில்லை மரமும், காஞ்சிபுரத்தில் மாமரமும், மதுரையில் கடம்பமரமும், திருநெல்வேலியில் மூங்கிலும், குற்றாலத்தில் குறும்பலாவும் கடவுள் இடமாக இருப்பன. ஆலமர நீழலிற்றான் சிவபெருமான் சைவசமயத்தின் சிறந்த வுண்மைகளை முதன் முதல் நான்கு முனிவர்க்கு வெளிப் படுத்தியதாக அறிகிறோம் ஊரிலுள்ளோர் கூடும் பொது விடம் ஆதியில் ஒரு மரத்தடியாகவே யிருந்தது. அதற்கு அம்பலம், மன்றம் என்ற பெயர்கள் உள்ளன. அம்பலம் என்ற சொல் இன்றுங் கோயிலைக் குறிப்பதற்கு வழங்கி வருதலை மலையாளத்திற் காணலாம். இந்நாட்டிலும் ஸ்ரீநடேசப் பெருமானுடைய கோயில் அம்பலமென்றே அழைக்கப்படுகிறது.

தமிழருடைய சமயம் மிகவும் பூர்வீகமான காலத்தி லேயே ஒரு முழுமுதற் கடவுளது வழிபாட்டின் பாலதா யிற்று. அதனை புரோபெசர் K. V. ரங்கசாமி ஐயங்கார் போன்ற பிராமணர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மும்மூர்த்தி என்ற கருத்து ஆதியில் ஆரியரதுபோற்றோன்று கின்றது. தமிழருடைய கருத்து சிவமும் சிவசத்தியுமென ஈரியல்பு பற்றிய கடவுட் கொள்கையாம். சிவசத்தி உலகத்தைப் படைத்து உயிர்கள் வீடடைதற்குரிய தொழில் யாவற்றிற்குங் காரணமா யிருப்பது. கடவுளிற்கும் உலகிற்கும் இடையே உயிர் கலந்து நிற்கின்றது. அஃது

உலகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. முதலில் உலக எல்லேக்குள் தோன்றி நின்று மறைந்து திருத்தமுறுகிறது. பின் கடவுளே நோக்கிச் செல்லும் வழியிற் செல்லுகின்றது. கடவுளுடைய அருட்சத்தி, ஆன்மா உலகை நோக்கிய காலத்திலும் கடவுளே நோக்கிய காலத்திலும் அதன் போக்கிற்கும் வரவிற்குந் துணையாக நின்று இறுதியில் அதனைப் பேரின்ப வீட்டில் உய்க்கும். அங்ஙனஞ் செய்யுங்கால் அதன் தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று ஐவகையாகக் கூறப்படும். சுருக்கமாகக் கூறுமிடத்துக் கடவுளே உலகத்தின் அம்மை அப்பராக வழிபடப்படுகின்றார். ஆரியர் கூறும் மும்மூர்த்திகளும் தமிழர் கொள்கைப்படி கடவுளாகார். ஆனல், கடவுள் அருள்வழி நின்று அவர் கட்டளைக்குட்பட்டு நடக்கும் உயர் நிலே உயிர்களாவர். மும்மூர்த்திகளில் முதல்வராகிய உருத்திரர் சிவனென்னும் பெயர் பெற்ற போதிலும் சிவாலயத்தில் வழிபடப்படுங் கடவுள் அவரல்லர். ஆனல், அவ்வுருத்திரரையும் சிவபெருமானையும் ஒரே கடவுளெனச் சுமார்த்தர்கள் திரியக்கொள்ளுகின்றார்கள். அம்மட்டோ! உருத்திரமூர்த்தி அழித்தற் கடவுளாதலால் துறவிகளே அவரைச் சிறப்பாக வழிபட வேண்டுமென்றும், இல்லறத்தார் விஷ்ணுவையே தமது குலதெய்வமாக வழிபட்டுச் செல்வவளம் பெறுதற்குரியர் என்ற கருத்தும் சுமார்த்தரால் நிலேநாட்டப்படுவன. இக்காரணத்தினுல் பிராமண விதவைகள் மாத்திரம் திருநீற்றை நன்முக அணிந்தும், ஏனைப் பெண்கள் அங்ஙனஞ் செய்யாது குங்குமதிலகம் இட்டும் வருகிறுர்கள். சைவசமயத்தில் காமியப்பயன் கருதி முக்கியமாய் வழிபடுதல் அம்மையையே யென்றறிக.

தத்துவக் கொள்கையை உற்று நோக்குமிடத்து, சைவ சித்தாந்தத்திற்கும் சுமார்த்த வேதாந்தத்திற்கும் சிறிதும் ஒற்றுமையில்லேயென்பது தெளிவு. கடவுளுடைய திருவருட் சத்தியின் இயக்கத்தால் உலகம், மாயை என்னும் அருவமாகிய சடசத்தியினின்று தோன்றி உண்மையில் உள்ள

தென்பது சைவக் கொள்கையாயிருக்க அது தோற்றத்தால் உண்மையும் மெய்ம்மையாக இல்லாததுமாம் என்று சுமார்த்த வேதாந்தம் கூறும். சைவத்தில் கடவுளும் உயிரும் வேறென்றும், உயிர் எண்ணிலவாய்க் கடவுளைத் தலைவனாக உடையதென்றும் கூறப்படும். வைணவம்போல ஆன்மாவு (உயிரு)க்காவது கடவுளுக்காவது முடிந்த உருவம் சைவத்திற் சொல்லப்படவில்லை. வேதாந்தம் உண்மையில் உயிர்களில்லை யென்றே வற்புறுத்துகிறது.

கிரியைப் பக்கத்தைக் கவனிக்குமிடத்துச் சிவாலய வழிபாட்டு விதிகள் ஆகமங்களிலும் பத்ததிகளிலுங் கூறப் பட்டுள்ளன. பூசைக் கிரியைகள் யாவும் சைவசித்தாந்த வுண்மைகளை அடையாளமாகக் காட்டுவன. சைவசமயத்திற் பிரவேசியாத ஒவ்வொருவரும் கோயிலில் யாதொரு பணி விடையுஞ் செய்யத் தகுதியற்றவரென்று ஆகமங்கள் முழங்கு கின்றன. சிவாலயத்திற் சுவாமிக்குப் பூசை கோயிற் குருக்க ளென்னும் வகையாராலேயே செய்தற்குரியது. அவர்களைப் பாதிச் சூத்திர அன்னியரென்றும், அவரோடு உடன் உண்டலும் மணவினை நிகழ்த்தலும் தங்கள் தகுதிக்கு இழி வென்றும் சுமார்த்தர்கள் கருதுவது அக்குருக்கள் ஆதியில் தமிழராக இருந்த காரணம் பற்றிப்போலும். ஆனால், ஆகமங்களோ கோயிற் குருக்கள் மாத்திரமல்ல தீக்கை பெற்ற ஒவ்வொரு சைவனும் சிவாகமத்தின்படி உபதேசம் பெறாத சுமார்த்தர்கள் கையால் உணவாவது நீராவது கொள்ளுதல் கூடாது என்று விதிக்கின்றன. அதுவேயுமின்றிச் சுமார்த்தப் பிராமணர் சமய விசேட நிருவாண தீட்சை பெற்று ஆசாரியாபிடேகம் பெற்றாலும் சிவாலயத்தில் பூசை செய்வதால் மூலத்தானத்திற்குப் போகவாதல் கூடாதென்று ஆகமங்கள் அறுதியிட்டுரைக்கின்றன. இதனாற்றெரிவது யாதெனில், கோயிற் குருக்களும் சுமார்த்தப் பிராமணரும் வெவ்வேறு மக்கட் பிரிவைச் சார்ந்தவர் என்பதே. பிரம்மஸ்ரீ P. R. கணபதி ஐயர் சமயப் பொருள் நிலைய சம்பந்தமாக வெழுதிய தமது புத்தகத்தில் கோயிற்குருக்கள் பிராமணருள்

கீழான ஒரு வகையாரென்று குறித்துள்ளார். மனுஸ்மிருதியில் சுமார்த்தன் செய்யும் சிராத்தத்தில் கோயிற் குருக்களுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சிவாகமங்கள் அவர்கட்குத்தான் உயர்ந்த உபசாரங்கள் யாவற்றையும் விதிக்கின்றன. கோயிற் குருக்கள் ஆலய வழிபாட்டை நடத்துவதற்காக ஏற்பட்ட தமிழருள் உயர்ந்த வகுப்பினராகிய வேளாளரினின்றுந் தெரிந்தெடுத்த ஒரு வகையாரென்று ஆராய்ச்சியுடையார் கருதுகின்றூர்கள். அவர்கள் ஆதி சைவரெனப்படுதல் சைவத்துள் முதன்மை பெற்றவராதலின் என்க. ஒரு காலத்தில் சுமார்த்தர்களுடைய சொற்சத்தி அதிகரித்த போது ஆதிசைவர்கள் தங்களையும் ஒருவகைப் பிராமணரென்று பெயர் வைத்துக் கொண்டனர். சுமார்த்த மதத்தைப் பரவச் செய்தோரது சூழ்ச்சி மிக்க இடைவிடா முயற்சியால் பொது ஜனங்கள் சைவத்திற்கும் சுமார்த்தத்திற்குமுள்ள வித்தியாசத்தை மறந்து ஆதி சைவர்க்கும் சுமார்த்தப் பிராமணருக்குமுள்ள வேறுபாட்டைக் கவனியாதவர்களாயினர். ஆயினும் பூசை நடத்துவதிலும் ஆலய சம்பந்தமான பிற விடயங்களிலும் பெரும்பான்மையும் சுமார்த்தர்களுடைய சம்பந்தமில்லாமலே சிவாலய காரியங்கள் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் வரை நடந்து வந்தன. சிறிது காலத்திற்குள் தரும ரட்சண சபையார் என்பார் தோன்றிக் கோயில் அதிகாரத்தை சுமார்த்த சம்பந்தமாக ஏற்படுத்திப் பல செல்வமிக்க கோயில்களின் மிகுதி வரும்படியைச் சிவாகமக் கருத்திற்கும் சைவக் கொள்கைக்கும் முரணுன வழியில் சுமார்த்தருக்குப் பயன்படுத்தி விட்டனர்.

சைவசமயத்தின் பிரமாண நூல்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவாம். சமயத்தின் பண்டைப் பிரமாண நூல்கள் தமிழிலே யிருந்தன. அவை யிருவகைப்படும். நான்கு முனிவர்க்கு மிக்க பழமையான காலத்தே கடவுள் ஞானத்தை உதிப்பிக்க அவர்கள் செய்தருளிய நான்மறை

ஒருவகையாம். அந்நான்மறையின் சார்பாகப் பலதமிழறிவர் மறைகள் பல செய்திருந்தனர். அவையெல்லாம் இப்போது மறைந்து விட்டன. கடவுள் திருவருளால் ஐம்முனிவர் பெற்ற அருள்நூல்கள் இருபத்தெட்டு இருந்தன. அவற்றின் திரிபுகளே இப்போது வடமொழியில் ஆகமங்களாகவுள்ளன. அவை தந்திரமெனவும்படும். நூல் என்ற தமிழ்ச் சொல்லின் மொழிபெயர்ப்பே தந்திர மென்னும் வடமொழி. ஆகமம் என்ற சொல் வடமொழியாளர் தந்திரங்கட்கிட்ட பெயராகத் தெரிகிறது. ஆகமம் என்னும் வடசொல் வந்தது என்னும் பொருட்டு. அது தமிழரிடமிருந்து ஆரியர்க்கு வந்தது என்று ஊகித்தற்கு இடந்தருவது 28 மூலாகமங் களும் 207 உபாகமங்களும் சிறந்த சைவ நூல்கள். அவை ஒவ்வொன்றிற்கும் நான்கு பாதங்கள் உள. முதற்பாதம் ஆலய வழிபாட்டின் பொருட்டுச் செய்யப்படும் கடமை களைப்பற்றிக் கூறும்; இரண்டாம் பாதம் ஆலயம் கட்டும் முறையும், அதனைக்கடவுளுக்கு ஆக்கும் முறையும், நித்திய நைமித்திக பூசா விதியும் பரிகார முதலியனவுங் கூறும்; மூன்றும் பகுதி தியானமுறையும், யோகமுறையுங் கூறும்; நாலாம் பகுதி ஞால அமைப்பையும், சமயக்கொள்கை களையும் வீடெய்துதற்குரிய ஞான நெறியினையுங் கூறும். கிரியைகளின் பொருளும் ஆண்டு விளக்கப்படும். முதலிரு பகுதிகளும் சைவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்தற்குரிய எல்லாவிதச் சடங்குகட்கும் உரிய விதிகளையுங் கொண்டுள்ளன.

கடல் கோள், பகைவர்கள் நூற்கோவையை யழித்தல், தமிழர்களது மடி அறியாமை முதலிய பல காரணங்களால் தமிழ் மூல நூல்கள் அழிந்தொழிந்த பின்பு கடவுட் பூசைக்குரிய நூல்கள் வடமொழி யாகமங்களும் தமிழ்ச் சித்தர் நூல்களுமே யாயின. அவற்றுள்ளும் சில பகுதிகளே இப்போதுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிவாலய மும் ஏதாவதொரு ஆகமத்தின் விதிப்படியே அமையப் பெற்ற தென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயம். ஆனல்

ஆகமவிதிகளைத் தற்காலத்திலே பத்ததிகள் மூலமாகவே கோயிற் குருக்கள் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

தந்திரத்தின் உயர்ந்த சிறப்பு யாதெனில், சாதிக் கட்டுக்களில்லாமல் எல்லா மரபினரும் கைப்பற்றுதற்குரிய விதிகளையுடைமையே. தந்திரத்தின் விசால நோக்கத்தையும் சுருதி ஸ்மிருதிகளின் ஒடுங்கிய நிபந்தனைகளையும் ஒத்துப்பார்த்து வேறுபாடு கண்டு தந்திர நெறியைப் புகழ்ந்த பெரியார், கல்கத்தா உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகளிலொருவராகிய (Sir John Woodroffe) என்பவராவர். தென்னாட்டிலே தற்காலத்தில் உள்ள சிவாகமங்களிலுங் கூட சாதிச் சார்பு சிறிது காணப்படுகிறது. தந்திரக் கருத்துக்கள் உபநிடதங்களிலும் வேத மந்திரப் பகுதிகளிலும் சிற்சில இடங்களில் கலந்துள்ளன.

தமிழிலே பிரமாண நூல்கள் வடமொழியினுந் தெளிவாகவேயுள்ளன. பூசை விபரத்தைப் பற்றிக் கூறும் தமிழ் நூல்கள் சித்தர் நூல்களே. பெரும் பான்மையும், தத்துவ சம்பந்தமான திருவருட் பாடல்கள் தேவார திருவாசகங்கள் முதலியன. அவைகளே சிறந்த பிரமாணத் துதி நூல்களாம். சைவசித்தாந்தக் கொள்கையை இனிது விளங்கத் தெளிவுபடுத்தும் முழுநூல் ஸ்ரீ மெய்கண்டாரது சிவஞானபோதம். பல சைவசமயிகளது பரம்பரைக் கொள்கை யாதெனில், ஸ்ரீ மெய்கண்டாரது தமிழ்ச் சிவஞானபோத உண்மைக் கருத்திற்கிணங்க ஆகமங்களையும் வேதங்களையும் பிற சைவ நூல்களையும் பொருள் கொள்ள வேண்டுமென்பதே. சுமார்ந்த வேதாந்தமும் வைணவமும் வேதசம்பந்தமான பிரம சூத்திரம், பகவத்கீதை என்பவைகட்குரிய பேருரைகளையே தமக்குப் பிரமாண நூலாகக் கொள்ளவும் சைவசித்தாந்தமானது அவ்வாறு வைதிக நூலொன்றையும் தனக்கு மூல நூலாகக் கொள்ளவில்லை யெனபது உற்று நோக்கத்தக்கது. சைவ சித்தாந்தத்தை விளக்கும் பேருரையும் தமிழிலேதான் உள்ளது. அதற்குச் சிவஞான பாடியம் என்று பெயர்.

இவ்விஷயம் சாதாரண ஜனங்களுக்குத் தெரிவதேயில்லை. பொதுவாகச் சைவனென்று தன்னைச் சொல்லிக்கொள்கின்றவன் தனது சமயத்தின் உயர்ந்த பிரமாண நூல் இன்னதென்று அறியாதவனாக விருக்கின்றான். அவன் அறியாமையினால் விளையும் காமியப்பயனையும் பொருளையும் சுமார்த்தர்கள் பெற்றுக்கொள்வது மிகவும் பரிதபிக்கத் தக்கதா யிருக்கிறது. சிவாலயத்தின் கொள்கைக்கு முற்றும் விரோதமாகிய இலக்கியமும் சமய நூலும் தழைத் தோங்குதற் பொருட்டுச் சிவாலயத்தின் மிகுபணம் முற்றும் சில இடங்களில் பயன்பட்டு வருவது அதற்குச் சான்றாகும். கோயில் குருக்களுக்கு ஆகமமுறை கற்பித்தலும் ஓதுவார் கட்குத் தேவார திருவாசக முதலியன கற்பித்தலும் இல்லா தொழிதலோடு கோயிலுக்கு மிக்க செல்வமும் விளக்கமும் தரும் வழிபடுவோரது பெருங் கூட்டத்திற்குச் சமய சம்பந்தமான அறிவு ஒரு சிறிதும் வழங்கப் பெறாமையும் கவனிக்கத்தக்கதே. சுமார்த்தத்திற்கும் சைவத்திற்கும் கொள்கை, ஒழுக்க முதலியவற்றில் உள்ள முக்கிய வேறு பாடுகளைச் சட்டமமைப்போர் நன்குணர்ந்தாலன்றித் தென்னாட்டுச் செல்வ வளமிக்க சிவாலயங்களின் பொருளனைத்தும் சிவாலயத்திற்குச் சிறிதும் சம்பந்த மில்லாத மதத்தைத் தழுவுகின்ற ஒருவகையார்க்கே முற்றிலும் பயன்பட்டு அன்னாரது தத்துவக்கொள்கை எங்கும் பரவிச் சிவாலய வழிபாட்டை வேரொடு அகழ்ந்து எறிதற்கு இடமமைந்துவிடும். ஆதலால் அவ் வேறுபாடுகள் யாவராலுங் கருதற்பாலன. அவை கீழ்வருமாறு:—

ஒரு சமயத்தில் பிரவேசிக்க விரும்புவோர் அதற்குரிய ஒரு சடங்கினைச் செய்துகொள்ளல் வேண்டும். சுமார்த்த மதத்திற்குப் பிரவேசக்கிரியை உபநயனம், வைணவத்திற்கு முத்திரை தரித்தல், சைவத்திற்கு அது சிவதீக்கையாகும். இக்கிரியையிலும் முக்கியமானது சமயத்தின் முக்கிய கொள்கைகளில் நம்பிக்கையுடைமையாகும். நம்பிக்கை யில்லாது சடங்கு மாத்திரம் செய்துகொள்ளுதல் அத்துணை

## சமயங்களின்

| சமயம் | வழிபடுங் கடவுள் | தோத்திரம் | பிரவேசக் கிரியை | கிரியா காண்டப் பிரமாண நூல் |
| --- | --- | --- | --- | --- |
| சைவம் | பரமசிவம் மும்மூர்த்திகளில் ஒருவராகிய ருத்திரனல்லர். மும்மூர்த்திகளுக்குந் தலைவர். மற்றைத் தெய்வங்கள் அவருக்கு அடியாராயுள்ள ஆன்மாக்கள். | தேவார திருவாசக முதலிய அருட் பாக்கள். | சிவதீக்ஷை | சிவாகமங்களும் பத்ததிகளும். |
| வைணவம் | மும்மூர்த்திகளில் ஒருவராகிய விஷ்ணுவே முதற் கடவுள், பிற தெய்வங்கள் அவர்க்குக் கீழ்ப்பட்டோர். | விஷ்ணு சம்பந்தமான வடமொழி வேதமந்திரங்களும் ஆழ்வார்களுடைய தமிழ் நாலாயிரப் பிரபந்தங்களும். | முத்திரதாரணம் அல்லது சமாசிரயம் அதாவது (சங்கு சக்கர முத்திரை) தரித்தல். | பாஞ்சராத்திரம் வைகானசம் என்ற இரண்டு ஆகமங்களும் வடகலையார்க்கு அவற்றோடு சுருதி ஸ்மிருதிகளும். |
| சுமார்த்தம் | சூரியனும் மும்மூர்த்திகளும் முக்கிய தெய்வங்கள். வேதத்திற் சொன்ன பல தெய்வங்களெல்லாம். | வடமொழி வேத மந்திரங்கள். | உபநயனம் | ஸ்மிருதிகளும் கல்பசூத்திரங்களும். |

# அட்டவணை

| தத்துவக்கொள்கைக் குப் பிரமாணநூல் | முக்கிய தத்துவக் கொள்கை | சமுதாயப் பக்கம் |
|---|---|---|
| முக்கிய நூல் சிவ ஞான போதம், அதைச் சார்ந்த சாத்திரங்கள். | முப்பொருளுண்மை கடவுள் (பதி) உயிர் (பசு) உலக மூலமாகிய மாயை (பாசம்) இம் மூன்றையுந் தொடர்பு படுத்தி நிற்பது கடவு ளுடைய திருவருள் (அருட் சத்தி.) | சமயவொழுக் கம் முக்கியம். வருணாசிரம தருமம் பிர தான மன்று. |
| 1. ஆழ்வார் பிரபந் தங்களின் வியாக்கியா னங்கள். 2. சில உபநிடதங் களும், பிரமசூத்திர மும், பகவத்கீதை இராமாநுஜ பாஷியப் படி. | விசிஷ்டாத் வைதம் கடவுளுஞ் சீவனும் வெவ்வேறுயிருப்பினும் கடவுளுடைய வடிவத் தின் பகுதியாக உலக மும் ஆன்மாவும் உள் ளன வென்பது அவர் கொள்கை. | வடகலை யார்க்கு வருணம் பிரதானம், தென்கலை யார்க்கு வரு ணத்தினுஞ் சமயம் பிரதானம். |
| பத்து உபநிடதங் களும், வியாசர் பிரம சூத்திரமும், பகவத் கீதையும் சங்கரபாஷி யப்படி. | ஏகாத்மவாதம் உண் மையில் பரப்பிரம்மத் தைத்தவிர வேறொன் றுமில்லை யென்பது. | வருணாசிரம தருமம். |

சிறந்ததன்று. சுமார்த்த மதத்தில் உபநயனம் பிராமணர்களுக்கே உரியது. எனினும் அவரைப் பின்பற்றிய சில வகுப்பினரும் பூணூல் தரித்துக் கொள்ளுகின்றார்கள். சுமார்த்த மதத்தில் அவயவியாக விருக்க விரும்பும் ஏனை வகுப்பினர்க்குப் பிராமண வழிபாடே சிறந்த இலக்கணம் போலும். ஆனால் சைவத்திலும் வைணவத்திலும் சமயப் பிரவேசக்கிரியை பார்ப்பான் முதல் பறையன் வரை எல்லார்க்கும் உரியதே. சமயத்திற் சேர்ந்து சமயாசாரங் கைக்கொண்ட ஒருவன் எம்மரபைச் சார்ந்திருப்பினும் அவன் ஆலய வழிபாட்டிற்குரியன். ஆலயத்துள் பஞ்சமர் செல்லக்கூடாதென்ற கொள்கை வருணாசிரம தருமக் கொள்கை பரவியதால் எழுந்ததாகும். இன்னொரு விசித்திரம் என்னவென்றால் சில மரபினர் ஓர் இடத்திலுள்ள கோயிலில் பிரவேசிக்க உடைமையும் மற்ற இடங்களிலுள்ள ஆலயத்திற் பிரவேசிக்க உரிமையின்மையுமேயாம். தற்காலத்திலே ஒரு வகுப்பார் கோயிலுள் செல்லவேண்டுமென்று முயல்வார்களாயின் அவர்கள் செல்லக்கூடாதென்பதற்குத் தெளிவான காரணமிருந்தாலொழிய வருணங் காரணமாக அவர்களைத் தடைப்படுத்துவது தக்கதன்றாம். தென்னிந்திய ஆலயங்களின் சிறப்பு அருளொழுக்கம் பற்றிய ஆசாரம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். அதனால் கள், ஊன் முதலியவை கோயில் குருக்களாலும் ஆலயத்திற் பணிவிடை செய்யும் யாவராலும் விலகப்படவேண்டுமென்பது ஒருதலை. ஆனல் சமயத்தைச் சார்ந்த ஒவ்வொருவனும் தெய்வ வழிபாடு செய்தற்கு உரிமையுடையவனே. அதற்குரியது யாதெனில் அவன் நீரின் முழுகித் தூய ஆடையுடுத்துத் திருநீறோ திருமண்ணோ அணிந்து பணிவும் அன்பும் உள்ள மனத்தினனாய் உண்மை வழிபாடு செய்யும் ஆர்வமொன்றே யாமென்க.

முற்றிற்று

# சுமார்த்தக் கலப்பால் சிவாலயங்களில் நிகழும் இடையூறுகள்

சிவாலயங்களில் வழிபாடு ஆகமமுறையிலேயே நடப்பதாயினும் சுமார்த்தர்களுடைய கலப்பால் எவ்வாறு நமக்கு இடைறுகள் நிகழ்ந்துள்ளனவென்பதையும் சுமார்த்த மதமானது எவ்வாறு சைவத்தை விழுங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறதென்பதையும் கவனிக்கவேண்டியதவசியமாயிருக்கிறது.

1. சிவபெருமானை எந்த மொழியிலும் சைவசமய அன்பர்கள் துதிக்கலாம் என்று ஆகமங் கூறுகின்றது. ஆனல் இந்த விதியைச் சிவதீக்ஷை பெருத சுமார்த்தர்கள் தப்பாக அனுட்டிக்கின்ருர்கள். என்னே? கோயிலில் அவர்கள் தங்கட்குப் பிரியமான வைதிகப் பாட்டுக்களைத் தீக்ஷையில்லாமலே பாட இடம் பெற்றுவிட்டனர்.

2. இதனல் பொது ஜனங்கள் மனத்தில் சைவத்திற்கும் சுமார்த்தத்திற்கும் உண்டான வேறுபாடு மங்கிக் கிடக்கின்றது. சில சிவாலயங்களில் சமய அறிவில்லாத தரும கருத்தர்கள் சுமார்த்தக் குருக்களது ஆடம்பரப் போலியுரைகளால் ஏமாந்து ஆதிசைவரை நீக்கிப் பூசை புரிதற்கு அவர்களை ஏற்படுத்திவிட்டனர். அதனல் கோயில் வழிபாடு அன்னிய சமயக் குருக்களால் ஆகம விரோதமாக நடைபெறுதற்கு ஏதுவாயிற்று. உதாரணமாகத் திருச்செந்தூரில் மூலஸ்தானத்திலுள்ள மூர்த்திக்கு ஆதிசைவர்களைநீக்கி மத்வ அல்லது சுமார்த்தக் குருக்களை நியமித்துவிட்டார்கள் அவர்கள் அக்கோயிற் பூசை முறைகளை விதிக்கும் குமாரதந்திரம் என்னும் ஆகமத்தை ஒரு சிறிதும் உணராதவர்கள். அவர்களது பூசை ஆகமத்திற்கு முற்றும் விரோதமானவைகள்- மலையாளத்தார் தொடர்பு இந்தச் சுமார்த்தக் கலப்புக்கு

முக்கிய காரணமாக விருக்கலாம். சரியான முறை யாதெனில், ஆதிசைவர்களைத் திருத்தமுறச் செய்து பூசைக்கு நியமித்தல் வேண்டும்; அல்லது தகுதியுடைய சைவக் குருக்களை அவர்கட்குப் பதிலாக நியமித்தல் வேண்டும்.

3. பல சிவாலயங்களில் தேவாரம் ஓதும்போது அதற்கு இடையூறுகப் பிராமணர்களுக்குப் பிரசாதம் செல வழிப்பதென்கிற தவறு நிலைத்திருக்கிறது. அதீக்ஷிதர்களான சுமார்த்தர்கள் தமிழைச் சூத்திர பாஷை யென்றிகழு கிறுர்கள். அறியாமைமிக்க ஆதிசைவன் அச்சுமார்த்தர்களது செல்வ அதிகாரத் தோற்றப் பொலிவு கண்டு மயங்கி, சமஸ்கிருதமே பிராமணர்களுடைய பாஷை என்ற தப்புக் கொள்கைக்கு இரையாகி விடுகிறுன்.

4. தருமகருத்தர்கள் சுமார்த்த மதத்தினராகவிருக்குங் கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய குரு பூசைகளும் அவர்கள் சரித்திர சம்பந்தமான பிரசங்கங்களும் தடைப்பட்டுப் போகின்றன. அந்நாயன்மார்கள் பார்ப்பார் முதற் பறையர்வரை உள்ள எல்லா வகுப்பினின்றும் வந்த வர்கள். அவர்கள் யாவர்க்கும் கோயிலிலே இடம் ஏற்பட் டிருப்பது சைவ சமயத்தினுடைய உலகெலாம் தழுவும் விசாலமான நோக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது. அந் நோக்கம் யாதெனில், வருணமன்று. பக்தியே வீட்டிற்கு உரிமை தருவது என்பதே. இக்கருத்து, பிராமணராய்ப் பிறந்தோரே முத்தியடையக் கூடுமென்ற ஸ்மிருதிக் கொள் கைக்கு நேர்விரோதமானது. கோவில்களில் கடவுட் பிரசா தத்தைச் சுவாமி சந்நிதானத்திலுள்ள எல்லா மரபினர்க்கும் ஒரே காலத்தில் வழங்குதலாகிய செய்தியும் சைவத்தின் விசாலமான நோக்கத்தையே காட்டிக்கொண்டு நிற்கின்றது. சமயவொழுக்கத்தால் ஒற்றுமைப்பட்ட எல்லா மரபினரும் உடன் உண்ணலாம் என்ற கொள்கைக்கு இதுவே வித்துப் போலிருக்கிறது. ஆலயம், பிராமணர் யாகசாலைபோலச் சுமார்த்த சமய நிலையமாக விருப்பின் அங்கே பிராமண

ரல்லாதார் பிரவேசிக்க இடமுமிராது. இவ்வகையான திருவமுது செலவழித்தலுமிராது. சிவாலயங்களில் விரிந்த நோக்கத்தைக் குறிக்கும் எதுவும் சுமார்த்தர்களால் கடியப் படுகிறது.

5. சென்ற ஆண்டிலே தமிழறிவு சான்றவரும் ஹைகோர்ட்டு வக்கீலுமாயுமுள்ள ஒரு தக்க அறிஞர் சைவ சமயத்தினுடைய உயர்ந்த வுண்மைகளை எடுத்து மொழியப் புகுந்த ஒரு காரணத்தால் திருநெல்வேலி ஆலயத்தில் சைவ சமயப் பிரசங்கம் செய்வதற்குச் சுமார்த்த தருமகருத்தர் களுடைய தடை ஏற்பட்டு அவர்களுடைய தனி அனுமதியை அவர் பெறவேண்டுமென்று விதி ஏற் பட்டது. இது சைவசமயத்தைப் பரப்புதற்கு எவ்வளவு இடையூறான காரியம் என்பதை எவரும் உற்று நோக்கக் கடவர்.

6. சிவாலயத்திலே சுமார்த்தர்கள் தங்கள் மதகுருவாகிய சங்கராசாரியாருக்கு ஆதிக்கம் வேண்டுமென்று பெருமுயற்சி செய்து வருகிறார்கள். பல சிவாலயங்களில் சங்கராசாரியார் மூலஸ்தானத்திற் புகுந்து சிவார்ச்சனை செய்யவேண்டு மென்று முயன்றிருப்பதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தில் பெரும்பான்மையும் அவ்வவ்விடங்களிலுள்ள சுமார்த்த உத்தி யோகஸ்தர்கள் அவர்கட்குத் துணை நின்றிருக்கின்றார்கள்; எனினும் அவர்கள் முயற்சி பல இடங்களிற் பயன்படவில்லை. சிவாலயங்களில் ஆதிசங்கரருடைய வடிவம் அமைத்திட வேண்டுமென்று அடிக்கடி சுமார்த்தர்கள் முயலுகின் றார்கள். இங்ஙனம் தங்கட்கு உரியவல்லாத உரிமைகளை ஆலயத்தில் பெறுவதற்குச் சுமார்த்தர்கள் அற்றம்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அறியாமையும் போலி நம்பிக்கையு முடைய சைவர்கள் தம் வசப்பட்டால் தங்கருத்தை முடித் திடவுஞ் செய்வார்கள்.

7. சிவாலயங்களில் தமது சீடர்களுடைய வேண்டு கோளுக்கிணங்கிச் சுமார்த்தக் குருக்கள் சிவாலயத்தில் ஒரு

பகுதியைத் தங்குமிடமாக உபயோகிக்கின்றார்கள். சுமார்த்தர்களுடைய கருத்து யாதெனில், தங்களுடைய குரு கடவுளுக்குச் சமானமாக உபசரிக்கப்பட வேண்டுமென்பதே. திருச்செந்தூரில் சுவாமிக்கு நிவேதனகாலத்திலேஅவருடைய சந்நிதானத்திலேயே ஓர் இடத்தில் சுவாமிக்கு உடன் உண்ணுந் துணையாகக் கருதப்படும் சில சுமார்த்தர்களுக்கு இலைபோட்டு அன்னம் படைக்கின்றார்கள். சாதாரண சுமார்த்தர்களே முருகக் கடவுளுக்கு உடனுண்ணுந் துணையானால் சுமார்த்தமத ஆசாரியரைக் கடவுளுக்குச் சமானமாக உபசரிப்பார்களென்பதற்கு யாது ஐயமுளது? மனிதர்கள் சிவாலயத்திற் றங்குவதால் பல அசுத்தங்கள் ஏற்படுமென்பதையுங் கவனியார்கள்.

8. ஆகம விதிக்கு விரோதமான தைமாசத்துப் பத்திர தீபம் போன்ற சுமார்த்த விழாக்களும் அலங்கார முறையும் சுமார்த்தரது சொற்சத்தியால் திருநெல்வேலிச் சிவாலயத்தில் ஏற்பட்டுவிட்டன.

9. சிவராத்திரி காலத்திலே ஆகம விதிக்கு விரோதமான நாளில் அவ்விசேடம் நடைபெறவேண்டுமென்று சுமார்த்தர்கள் கூக்குரலிடுகிறார்கள். சமய அறிவும் சமயப்பற்றுமில்லாத சைவ தருமகருத்தர்களும் கமிட்டி மெம்பர்களும் சைவர்கட்கு ஒரு சிவராத்திரியும் சுமார்த்தர்களுக்கு ஒரு சிவராத்திரியுமாக திருநெல்வேலி முதலிய சில இடங்களில் நடத்தி வருகிறார்கள். இஃது எதைப் போலிருக்கின்ற தென்றால் மணவினை நிகழ்த்துவதற்குச் சைவச் சோதிடர் ஒரு நாளும் சுமார்த்தச் சோதிடர் பிறிதொரு நாளும் குறித்த காரணத்தால் அவ்விருவருங் குறித்த இருநாளிலும் மணமகட்குத் தாலிகட்டுவதையொக்கும். இவ்வளவு நகைப்பிற்கு இடமாகிய காரியம் இன்னுஞ் சிவாலயங்களில் நடந்து வருகின்றது. ஜனங்களுக்குப் பிரமாணங்களைத் தப்பாக எடுத்துக் காட்டுவதில் சுமார்த்தர்கள் கைதேர்ந்தவர்கள் போற் றெரியவருகிறது. சிறிது காலத்திற்குமுன் திருநெல்வேலியில் சூட்சும மிக்க

சில சுமார்த்தர்கள் ஆகம சம்பந்தமில்லாத பிரமாணங்களை ஓர் ஆதிசைவர் இயற்றிய ஆகமப் பிரமாணக்கோவை என்று ஒரு பொய் நூல் வெளியிட்டார்கள். அக்காலை ஓர் ஆகம பண்டிதர் அவர்கள் காட்டிய பிரமாணங்கள் ஆகமத்தில் உள்ளனவல்ல, ஸ்மிருதிகளிலும் புராணங் களிலுமிருந்து எடுத்தவைகள் என்று காட்டி அவர்களது பொய்ம்மையை வெளிப்படுத்தி விட்டார்கள். இவ்வித மாகச் சைவர்களுடையவும் கோயிற் குருக்களுடையவும் சமய நூல் அறியாமை தாங்களே தங்கட்கு மயக்கத்தைத் தேடிக்கொள்ள ஒரு காரணமாக விருக்கிறது. சாமா னியனான சைவனுக்கு ஆகம அறிவு கிடையாது. அவ்வாறே பெரும்பான்மையும் கோயிற் குருக்களுமிருக்கின்றார்கள். கோயில் பட்டர் ஒருவர் ஆகமவிதி தெரியவேண்டுமென்றால் சாதகாசாரியனென்று போலிப்பெயருள்ள சுமார்த்த ரொருவரை வினவுகின்றார். அவர் கோயில் காரியங் களுக்குக்கூட ஆகம விதிகளுடன் சுமார்த்த விதிகளையும் உடன் சேர்த்து ஒரு விதாயம் காட்டுகின்றார். அவ் விதாயம் பிடிபட்ட காரியம் நடத்துகின்றார். இஃது எவ் வளவோர் அறியாமை. இக் காரணம்பற்றி இரண்டாண்டு களுக்கு முன்பாக இராசவல்லிபுரம் என்னும் ஓர் ஊரிலுள்ள சிவாலயத்தில் கும்பாபிஷேகம் நடந்தபோது சுமார்த்த சாதகர்களை அறவே ஒதுக்கி விட்டார்கள்.

சிவாலய வரும்படி மிகுதியைச் சுமார்த்தர்களுடைய பெருநன்மைக்கே பயன்படுத்த வேண்டுமென்ற அவர் களது எண்ணமானது சில காலங்களுக்குள் பெரிய கோயில் கள் சம்பந்தமாக நடந்த ஸ்கீம் (Scheme) வியாச்சியங் களில் அவர்களுக்கு எளிதாகக் கை வந்துவிட்டது. அவ்வியாச்சியங்களில் ஏற்படுத்தியஸ்கீம் (Scheme) ஏற்பாடு களின் பெரும்பயன் சுமார்த்தர்களுக்கே ஆயிற்று. கோயி லுக்கு அன்னியமான சமயத்தைச் சார்ந்த அவர்களுக்குக் கோயில் விஷயங்களில் கருத்து ஊன்றினமைக்கு இதுவே காரணம். இதற்கு உதாரணமாக இராமேசுரம் சிவா-

லயத்தை யெடுத்துக்கொள்ளலாம். நெடுங்காலமாகப் பரம்பரையாக ஒரு சைவப் பண்டாரச் சந்நிதியின் ஆதிக்கத்திலிருந்த அவ்வாலயத்தைப் பல சமயத்தார் ஆளுகைக்கு உள்ளாக்கி நாளடைவில் அதிகரித்து வருகின்ற அவ்வாலய வரும்படி மிகுதியைக் கோயில் குருக்களுக்காவது வழிபடும் சைவசமயிகளுக்காவது பயன்படுத்தாமல் கோயிலுக்குச் சிறிதும் இயைபில்லாத வடமொழிக் கல்வி சுமார்த்த வைணவப் பிராமணர்களுக்கே கொடுக்கும்படி ஐக்கோர்ட்டுத் (High Court) தீர்ப்பும் ஏற்பட்டு விட்டது. இஃது எதுபோலிருக்கிறதென்றால், சூழ்ச்சி மிக்க சில கிறித்தவர்கள் ஒரு மகமதியப் பள்ளிவாசலின் வரும்படியை யெடுத்துக் கிறித்தவப் பாதிரியாய் வருபவர்களுக்குக் கிறிஸ்து மதம் போதிக்கப் பயன்படுத்திளுற் போற்றேன்றுகிறது. இப்பொழுது இந்நாட்டிலுள்ள நிலைமையைக் கவனிக்கும் பொழுது தக்க பாதுகாப்பு அமைக்காவிட்டால் இராமேசுரத்துக்கு வந்த முடிபு தமிழ் நாட்டுப் பெரிய சிவாலயங்களுக்கெல்லாம் வந்துவிடக் கூடுமென்று தோன்றுகிறது. சங்கராசாரியர் முதலிய தமது மதத்தலைவர்களுக்கும் ஆகமத்திற் கூறப்படாது வேதத்திற்கூறப்படும் சில தெய்வங்களுக்கும் கோயிலில் இடங்கிடைத்து விட்டால் சுமார்த்தர்கள் கருத்து எளிதாக முற்றுப்பெறும். இப்பொழுதே அதற்கு அடையாளங்கள் காணப்படுகின்றன. சில ஆலயங்களில் நவக்கிரகங்கள் முன்னில்லாமற் பின் அமைந்து விட்டன. சிவாலயத் தூண்களிலுள்ளசிற்ப விநோதத்திற்காக அமைத்த அநுமார், இராமர் முதலியோரது வடிவங்களைச் சுமார்த்த மதத்தினர் சிலர் அவற்றில் முதலில் கொஞ்சம் எண்ணெயைத் தடவிச் சில பூக்களைத் தூவிக் கும்பிடத் தொடங்குகின்றார்கள். நாளடைவில் கோயிற் பட்டர்களுக்குப் பொருள் கொடுத்து அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். இஃது அவ்வடிவங்களும் கோயில் மூர்த்திளோடு சேர்த்துப் பிற்காலத்தே பூசை செய்யப்படுவதற்கு அடிப்படையாக இருக்கிறது.

சுமார்த்த மதத்தர் இலாபம் பெறுதற்குரிய வழி எளிதாகவிருக்கிறது. சைவ சமயத்தின் பிரதான உண்மைகளைத் தாமே அறிந்து கொள்ளுதற்குப் போதிய பொழுதில்லாமல் தங்கள் வேலைகளிற் கருத்தூன்றியவர்களாயிருந்தும் தற்காலத்தில் பெரிய சிவாலயங்களையும் வேத பாடசாலைகளையும் ஏற்படுத்துகின்ற நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுட் சிலரும் அவரைப் போன்றவர்களும் கோயிற் காரியம் ஒவ்வொன்றிலும் தங்களுடைய சுமார்த்தக் காரியஸ்தர்களையும் புரோகிதர்களையும் அபிப்பிராயங் கேட்டு நடத்தல் சுமார்த்தர்களுக்குப் பெரிய உபகாரமாகவிருக்கிறது. கோயில் பட்டரும் பெரும்பான்மையும் தஞ்சமயஞ் சிறிதும் அறியாது தமது பூசைத் தொழிலைக் கூலி வேலை யளவாகக் கருதுகின்றனர். சுமார்த்தரோடு சேர்ந்த ஒருவகைப் பிராமணராகத் தம்மைக் கருதிக் கொண்டு சைவசமயிகளோடு ஒத்த உணர்ச்சியில்லாமல் ஆங்கிலங் கற்றுள்ள சுமார்த்தர்களது உலக வாழ்வின் பெருக்கையும் அதிகாரத்தையுங் கண்டு மகிழ்வுற்றுச் சுமார்த்த அரணிற்குள் ஒரு மூலை கிடைத்தால் அது தமது வாழ்க்கையில் பெறலரும் பேறு கிடைத்ததெனக் கொண்டிருக்கின்றனர். சுமார்த்தர் தமது கோட்டைக்குள் கோயில் பட்டருக்கு இடங்கொடுப்பதாயிருந்தால் சிவாலயங்களில் பூசாவிதிகளை ஆகம விரோதமாக மாற்றுவதில் அவர் பின்னடையார். பிராமணரல்லாத சாமானியச் சைவரோ தம் மதம் சிறிதும் அறியாது சுமார்த்தரது சூழ்ச்சி மிக்க போலி நல்லுரைகளுக்கு இரையாகின்றனர். ஒழுங்காக அணி வகுத்துள்ள புத்திமான்கள் போலச் சுமார்த்தப் பிராமணர்கள் இருத்தலால் தங்களுக்கு இயைந்துள்ள உபாயங்களை எவ்வாறு ஆலயங்களில் செலுத்தி அவைகள் ஸ்மிருதி நிலையங்களாக மாற்றி விடக்கூடுமென்று தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். இதற்கு முன்னமே சாதாரண சனங்களைச் சைவசித்தாந்தம் அல்லது ஆகம சைவம் தமது போலிப் பெருமதத்தின் உள்ளடங்கிய பகுதியென்று நம்பும்படி செய்து, சைவ சமுதாயத்தாருக்குத் தங்களைத்

தலைவராக்க வழிதேடிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சைவ சமயத்தைச் சேர்ந்த யாவரும் உணர்ந்து, இந்து மதம் என்ற போலி மொழியால் மயங்காமல் தமது சைவ சமயம் சுமார்த்தத்தின் வேறுகிய தத்துவ சாத்திரமும் இலக்கியமும் சமுதாய முறைகளும் இன்னவை யென்று தெளிந்து, அவற்றைச் சைவ சமய நிலையங்களில் உறுதிபெறும் வண்ணம் இடைவிடாது கண்ணுங் கருத்துமாக முயன்று, சுமார்த்த மதத்தினருக்குத் தங்கள் உயிர்கள் அடிமைப் பட்டுப் போகாவண்ணம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கடவர். அதற்குச் சிறந்த சாதனம் சைவ முறைப்படி வழுவாது சிவாலய காரியங்களை நடத்தவல்ல சைவ சமய வுணர்ச்சியுடைய சைவ சமயிகளையே சிவாலயங்களுக்குத் தருமகருத்தர்களாகவும் கமிட்டி மெம்பர்களாகவும் ஆக்க முயல்வதேயாம்.

முற்றிற்று

# "இந்து என்ற பெயர்...?"

1. உள்ளங்கவர் கள்வன்

(BY: கி. வா. ஜகன்னாதன்)

"இந்து மதம் என்று இக்காலத்தில் வழங்கும் பெயர் பல சமயங்களுக்கும் பொதுவானது. அப்படி ஒரு தனிச் சமயம் இல்லை ஆனாலும் சைவம் வைணவம் முதலிய சமயங்கள் பலவற்றிற்குப் பொதுவாக அந்தப் பெயர் அயல்நாட்டவரால் வழங்கப் பெற்று நாளடைவில் நாமும் வழங்கும்படியாயிற்று."

2. காங்கிரஸ் 15-7-56.

(ஜூன் வெளிவந்த பிலிம் இண்டியாத் தமிழாக்கம்)

"ஆங்கிலச் சரித்திரப் பேராசிரியர்கள் தான் முகலாயர்கள் இந்தியருக்குக் கொடுத்து வந்த 'இந்து' என்ற பெயரை எடுத்துக்கொண்டு மேலும் மேலும் அழுத்தமாக வற்புறுத்தி...... பிரிவினையை ஏற்படுத்துவதற்குக் காரண கர்த்தாக்களாக இருந்தார்கள். முகலாயர்கள் இந்தியாவைப் படையெடுப்பதற்கு முன்பு ஹிந்துக்கள் என்ற பெயரே கிடையாது."

3. **பிரம வித்தியா பத்திரிகை**

**(புத்தகம் 4. இலக்கம் 14. பக்கம் 201. 202.)**

பக்கம் 201

"ஹிந்து என்னுஞ் சொல் புதியதே. இதைச் சில பாஷா கவிகள் உபயோகிக்கின்றனர். சில நவீனர் இது மகமதியரிட்ட பெயரென்றும், மற்றவர் யவனர் ஸிந்து நதிக்கரையில் வசிப்ப வராதலின் ஹிந்துக்களெனப் பெயரிட்டா ரென்றும், வேறு சார்பினர் இஃதறிஞர் பெயரென்றும் பிறர் ஓர்வகைச் சித்சாந்திகள் பெயரென்றும், மற்றவர் ஒதுக்கப்பட்டவர் பெய ரென்றும் சிலர் பிரஷ்டர் பெயரென்றும் பலவழி சொல்லு கிறார்கள்.

பக்கம் 202.

"இச் சொல் மகமதியர் விசேஷமாய் நெடுங்காலமாய் வியவ கரிப்பதாய ஆரட்ட பாஷை (அதாவது அரபிபாஷை). அதில் ஹிந்து என்று (அஞ்ஞானி என்னும் பொருளில்) இருக் கின்றது. அவர்கள் இந்த இந்தியா தேசத்தின் ஆக்ஷியைக் கைக்கொண்டபொழுது தம்மவர் ஞானிகளாகவும் மற்றவர் அஞ்ஞானிகளாகவும் எண்ணி இப்பெயரை இட்டார் என்பது."

4. **தினமணி 10—3—58**

"ஹிந்தி என்ற வார்த்தையே இந்தியச் சொல் அல்ல என்று ராஜாஜி இங்கு தமிழர் அளித்த வரவேற்பில் பேசுகையில் கூறினார். பூர்வீக பாரசீகர் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியா வின் பூர்வீக குடிகள் பேசிய மொழிக்கு 'ஹிந்தி' என்று பெய ரிட்டனர் என்று அவர் விளக்கினார்"

5. **R. K. முகர்ஜி**

*என்பவர் சென்னைக் கோகலே ஹாலில் 27-9-41ல் நடந்த கூட்டமொன்றில் பிரசங்கித்தது.*

"India and Hinduism are Organically related like body and soul The name HINDUISM was given to them by Persians"

6. **பங்கஜவல்லியின் கதை**

"கிறிஸ்து பிறந்த 1191-வது வருஷத்திலே சகாபுடீன் கோரி என்னப்பட்ட மகமதிய அரசன் டில்லி இராஜ்யத்தை ஜயித்து மக திய அரசை நிலைபெறச் செய்தபோது, இந்நாட்ட வர்களாகிய ஆரியரை இந்துக்களென்று அழைக்கத் தொடங் கினர்......இதனை இத்தேச புராதன சரித்திரமாகிய 'பாரத பாகி' என்னப்பட்ட நூலிற் காணலாம்."

7. **HINDU 23-11-1947.**

(Origin of the word Hindu)

"Gandhiji then referred to a question that was sent by a member of the audience; What is a Hindu? what is the origin of word? He said that these were pertinent questions and topical and added he was on historion and he laid claim to no learning. But he had read in some authentic book on Hinduism that the word Hindu did not occur in the Vedas, but when Alexander the great invaded India the inhabitants of the country to the east of Sindhu, which is known to English-speaking Indians as Indus, were discrided as Hindus. The etter 'S had become 'h' in Greek. The religion of these inhabitants become Hinduism''.. .. என வந்துளளது.

8. **பிரம்ம வித்யா பத்திரிகை**

(புத்தகம் 4. இலக்கம் 14. பக்கம் 201, 202)

''பார்ஸி பாஷையில் ஹ என்னும் எழுத்து ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ என்னுமெழுத்தாய் முடிகின்றது. ஆயின் ஸிந்து நதிக்கரையைச் சேர்ந்தவர்களை ஸிந்துக்களென......சொல்ல வேண்டியிருக்க அவர் பாஷையினியல்பு மாறுது ஸ என்னுமெழுத்தை ஹ என மாற்றி ஹிந்து என்கிறுர்கள்'' என்றது. அவர் என்றது யவனரை (கிரேக்கர்).

குறிப்பு : இதுவும் காந்தி சொன்னதும் ஓரளவு ஒத்திருக்கின்றன.

9. **ரத்ன மாலிகா**

(விச்சூர் முத்துக்குமாரசாமி முதலியார் B.A.)

''பழங்காலத்தில் பாரசீக வியாபாரிகள் கைபர் கணவாய் வழியாகப் பாரத தேசத்தோடு வியாபார சம்பந்தமாகப் போக்குவரத்துச் செய்து வந்தனர். அவர் கொண்டுவந்த சரக்குகளைப் பாரதத்தின் வடமேற் கெல்லையிலுள்ள மலைவாசிகள் அடிக்கடி கொள்ளையிடுவதுண்டு. அதனுல் அப் பாரசீகர் அவரை ஹிந்துக்களென்றழைத்தனர். ஹிந்து என்பது பாரசீக பதம். அாபு அதற்கு மூலமாகலாம். கொள்ளைக்காரன், அடிமை, கறுப்பன் என்பன அதற்கருத்தம்.''

10. **பங்கஜவல்லி கதை**

"நம்மவர்கள் இந்நாட்டிற் குடியேறிய முகமதியர்களை அசுத்தர் என்னும் பொருள் தரத்தக்க 'மூலக்' என்னும் பெயரால் அழைத்தமையால், அவர்கள் இவர்களை விசுவாச மில்லாதவர்கள் என்னும் பொருளைத் தரத்தக்க இந்துக்கள் என்னும் பெயரால் அழைத்தார்கள். மூலக் என்னப்பட்ட பெயர் மகமதியர்களுக்கு நெடுநாள் வரையில் வழங்கப்பட்டிருந்தது."

11. **பிரம வித்யா**

(புத்தகம் 9, இலக்கம் 18, பக்கம் 272.)

"இந்து என்ற நாமம் பாரசீக பாஷையில் கரியன், பொய்யன், அடிமை யென்று பொருளாம்"

12 **தமிழ்நாடு 5-1-56**

"சென்னை ராஜ்யத்தின் கவர்னராயிருந்து வந்த வடவராகிய ஸ்ரீ பிரகாசாவும்"

"இந்து என்று கூறும் சொல் தவறானது என்றும் சனாதன தர்மம் என்றுதான் கூறவேண்டும் என்று பேசியிருக்கிறார்.

13. **பிரம்ம வித்யா**

'இதுவரையி லொருவரும் காணாத வர்த்தங்களைக் காட்டு கிறதுமாகிய இந்து சப்தார்த்த விசார மென்றோர் புத்தகம்' (பி. வி. 5, 20, 333) என்பதால் இந்து என்பது இந்நாட்டுப் பூர்வீக சம்ஸ்கிருத விற்பன்னர் யாருமே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளாத சூதகச் சொல் அல்லது அயல்நாட்டுச் சொல் என்பது விளங்கும். ஆகலின் அவ்வர்த்த விசாரப் புத்தகம் அவ் விற்பன்ன பரம்பரையின் அருவருப்புக்கு இலக் காயின தென்றலே திண்ணம்.

14. CHAMBERS DICTIONARY

"A native of Hindustan; now more propoerly applied to native Indian belieavers in Brahmanism, as opposed to Mohammedans.

15. THE POCKET OXFORD DICTIONARY

Hindu—one esp. Aryan of N. India, who professes HINDUISM.

Hinduism—Poly theistic religion of Hh (Skr sindhu River, esp, the Indus)

## Mr. H. V. PATASKAR
### Governor of Madhya Predesh
### (Indian Express Dated 11—1—60)

Sanchi Jan 9.

Mr. H. V. Pataskar Governor of Madhya pradesh Said here today that 'Hinduism' was not a religion but a culture or a synthesis of all faiths which originated in india.........He said that the word 'HINDOO' itself came into existence in about the 12th century A. D more than a thousand years after the period of Buddha. There was never and there had never been a religion known as HINDUISM in the sense of its being a single form of faith or worship. Hinduism as it came to be understood later and was understood commonly even now included all forms of worship and faiths in india except the two faiths of Islam and christianity which originated outside India.

குறிப்பு : 'இந்து' என்ற சொல்லுக்குத் தனக்கென ஒரு பொருள் கிடையாது. ஒவ்வொருவரும் அவரவர் மனதில் தோன்றியபடி பொருள் கொள்கிறார்கள் என்பதும் மேற்காட்டிய மேற்கோள்களினால் தெரிந்து கொள்ளலாம்.

1984, நவம்பர் மறு பதிப்பு

# நன்றி!

"தமிழக இந்து சமயங்களின் சுருக்க வரலாறு" எனும் இந்நூலை அச்சிட்டுக் கொள்வதற்கு-தமிழ் 'கா.சு.' நினைவு நூலகத்துக்கு உரிமையை அன்பும்-பண்பும் கொண்டு வழங்கிய நூலக வித்தகர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் சீர்மிகு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கட்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அச்சிட்டோர் :

அன்னை அஞ்சுகம் அச்சகம்
சென்னை—14.



தாகூர் சட்ட விரிவுரையாளர்

அறிவுக்கடல்-சிந்தனைச் சுரங்கம்

பல்கலைப் புலவர்

**கா. சுப்பிரமணியம்** எம்.ஏ., எம்.எல்.,

அவர்கள்